# அடுத்த கொலைக்குத் தீர்வு காண, உள்ளார்ந்த பார்வை தேவை!

## SonyLIV மற்றும் அப்ளாஸ் எண்டர்டெயின்மென்ட் அதன் முதல் தமிழ் ஒரிஜினல் 'இரு துருவம்' – ன் அறிமுகத்தை அறிவித்துள்ளன

**செய்தி வெளியீடு:**
**தேசியம், செப்டம்பர் 30, 2019:**

தனது மனைவி திடீரென்று காணாமல் போனதால் குழும்பித்தவிக்கும் ஒரு மதிநுட்பம் மிக்க காவல்துறை அதிகாரியான விக்டருக்கு, அச்சம்பவத்தில் ஒரு திடீர் துப்பு கிடைக்கிறது. ஆனால், அவர் மேற்கொண்டு விசாரணையில் முன்னேற முன்னேற, விஷயம் ஆழமாக விரிவடைகிறது மற்றும் ஒட்டுமொத்த நகரத்தையும் அச்சத்தில் ஆழ்த்தும் வகையிலான சம்பவங்கள் நடப்பது அவரை குழப்பத்தில் ஆழ்த்துகிறது. அடுத்து அவர் என்ன செய்வார்? இந்தியாவின் முதல் ப்ரீமியம் வீடியோ ஆன் டிமான்டு (VOD) அடித்தளமான SonyLIV, ஆதித்யா பிர்லா குழுமத்தின் துணை நிறுவனமான அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட் உடனான கூட்டாண்மையோடு தமிழின் முதல் ஒரிஜினல் 'இரு துருவம்' SonyLIV – ல் இன்று ப்ரீமியரிங் செய்யப்படவுள்ளதை அறிவித்துள்ளது. இது தொடர்பான செய்தியாளர் கருத்தரங்களில், சோனி பிக்சர்ஸ் இந்தியா, டிஜிட்டல் பிரிவின் வர்த்தகத் தலைவர் திரு.உதய் சோதி, சோனி பிக்சர்ஸ் நெட்வொர்க்ஸ் இநதியா, டிஜிட்டல் பிரிவின், புதிய முன்முயற்சிகள், தலைமை உள்ளடக்க கூட்டாண்மைகள் தலைவர் திரு.அமோக் துசாத் மற்றும் அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட் தலைமை செயல் அலுவலர் திரு.சமீர் நாயர் மற்றும் இரு துருவம் கலைஞர்கள் பங்கேற்றனர்.

பிரமோத் சேருவால்த்தின், சைன் ஆ.்.ப் லை.்.ப் புரொடக்ஷன்ஸால், அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட்டிற்கான தயாரிக்கப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி "பைபோலார்" என்னும் அர்த்தம் கொண்டதாகும் மற்றும் இதை எழுதி இயக்கியவர் திரு.M.குமரன் ஆவார். ஒரே இரவில் ஒட்டுமொத்த நகரத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையிலான பல்வேறு கொலைகள் நடைபெறும் காட்சியுடன் இந்நிகழ்ச்சி துவங்குகிறது. "திருக்குறள்" (ஒரு பாரம்பரிய தமிழ் புத்தகம்) குறள்களை துப்பாக விட்டுச் செல்லும் ஒரு தொடர் கொலையாளியைப் பற்றி அறிந்து அனைவரும் அச்சத்திற்கும் மற்றும் அதிர்ச்சிக்கும் ஆளாகின்றனர். மதிநுட்பம் மிகுந்த காவல்துறை ஆய்வாளர் டேவிட் விக்டர், கொலையாளியை கண்டறியும் பணிக்கு நியமிக்கப்படுகிறார். வேட்டையாடுபவரே வேட்டையாடப்பட்டால் என்னவாகும்? பல்வேறு திடீர் திருப்பங்கள் நிறைந்த சூழலில் இந்த விஷயத்தில் விக்டர் அவர்கள் ஆழமாக இறங்குகிறார், என்ன காத்திருக்கிறது என்பதை அறியாமல். இத்தகைய கொடூரமான கொலைகள் குறித்து விசாரிக்கும் நிலையில், அவரது மனைவி சந்தேகமான முறையில் காணாமல் போனது குறித்த விசாரணையையும் அவர் எதிர்கொள்கிறார். இந்த இரண்டு சம்பவங்களுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா? இந்த விசாரணை அவரை மனைவியிடம் கொண்டு சேர்க்குமா? தனது தொழில்நிபுணத்துவ மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தத்தக்க விபரங்களை ஆய்வாளர் விக்டர் எதிர்கொள்வதை இந்த பரபரப்பான தொடர் காட்சிப்படுத்துகிறது.

10 அத்தியாயங்கள் கொண்ட இந்த இரு துருவம் தொடரில், தமிழின் முன்னணி நடிகராகவும் மற்றம் OTT பிரிவில் முதல் முறை கால்பதிப்பவராகவும் திகழும் நந்தா துரைராஜ், முன்னள் மிஸ் தமிழ்நாடாகவும் மற்றம் தமிழ் இணைய உலகில் பிரபலமானவராகத் திகழும் அபிராமி அய்யர், இளம் யூடியூப் பிரபலம் அப்துல் மற்றும் பிரபல நாடக மற்றும் திரைப்பட நடிகர் செபாஸ்டியன் மற்றும் அனீஷா ஆகியோர் இந்த பரபரப்பான தொடரில், முன்னணி கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். துவக்கம் முதல் இறுதி வரை உங்களை நகராதபடி உங்கள் இருக்கையில் கட்டிப்போடும் வகையில் இந்த இணையத் தொடர் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் நேயர்களுக்கான SonyLIV’ன் இரண்டாவது உள்ளடக்க வழங்குதலாக இரு துருவம் திகழ்கிறது. மே 2019 – ல், சந்தையில் கால்பதித்ததையடுத்து இந்த அடித்தளம் சமீபத்திய அதன் பிரபலமான நிகழ்ச்சியான கிரைம் பேட்ரோல் - ஐ, நடிகர் கணேஷ் வெங்கட்ராமன் உடன் இணைந்து அறிமுகம் செய்தது நேயர்களின் கவனத்தை ஈர்த்தது. இரு துருவம், கிரைம் பேட்ரோல், மை மாராப்பு, குக்கீஸ் மற்றும் விரைவில் வெளியிடப்படவுள்ள தமிழ் ஒரிஜினல் ஐவர் போன்றவைகள், தமிழ் நேயர்களுக்கு தமிழ் பாரம்பரியங்கள் மற்றும் உணர்வுகள் சார்ந்த உள்ளூர் உள்ளடக்கத்தை வழங்கும் SonyLIV திட்டங்களின் ஒரு பகுதியாகும். கூடுதலாக, SonyLIV – ன் மிகப்பிரபலமான நிகழ்ச்சிகளில், TVF ஒரிஜினல்களான பிட்சர்ஸ், பெர்மணன்ட் ரூம்மேட்ஸ், டிரிப்ளிங் ஆகியவைகளுடன் சோனி பிக்சர்ஸ் நெட்வொர்க்ஸ் இந்தியா (SPN) உள்ளடக்கத் தொகுப்புகளிலிருந்து CID, பாட்டியாலா பேப்ஸ், லேடீஸ் ஸ்பெஷல், அலாவுதீன், பேஹுத் உட்பட்ட 40 – க்கும் மேற்பட்ட பிரபலமான நிகழ்ச்சிகள், நேயர்களுக்கு ஒரு கட்டமைந்த பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்கும் வகையில் தமிழில் வழங்கப்படுகிறது.

**<u>கருத்துகள்:</u>**

**சோனி பிக்சர்ஸ் இந்தியா, டிஜிட்டல் பிரிவின் வர்த்தகத் தலைவர் திரு.உதய் சோதி**

**“அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட் உடனான இக்கூட்டாண்மை, கதைகூறலில் நுட்பமான எங்களது ஆழ்ந்த நுகர்வோர் புரிதலுடன் கலந்துள்ளது. “இரு துருவம்” உடன், எங்களது தமிழக வழங்குதல்களை அதிகரிக்கவும் மற்றும் உள்ளூர் நேயர்களுக்கு விருப்பமான OTT சேருமிடமாகத் திகழவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இந்தியா போன்ற போட்டி நிறைந்த சந்தையில், இத்தகைய கூட்டுறவுகள், ஒரு விரிவான சூழலமைப்பிற்கான ஏற்பாடாகும் மற்றும் அது டிஜிட்டல் பிரிவில் சிறந்த கதைகளை வழங்கும் எங்களது உறுதிப்பாட்டினை வலுப்படுத்தும். அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட் உடன் ஒரு நீண்டகால மற்றும் பலன்மிக்க கூட்டுறவை நாங்கள் எதிர்நோக்குகிறோம். இப்பிராந்தியத்திற்கான எங்களது உள்ளடக்க வழங்குதல்கனை மேலும் பரந்துபட்டதாக்க மாற்ற இது உதவும்”**

**அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட், தலைமை செயல் அலுவலர், திரு.சமீர் நாயர்:**

**“இந்தியா பலதரப்பட்ட பிரத்தியேகத்தன்மை கொண்ட மக்கள் நிறைந்த நாடாகும் மற்றும் அனைத்து நேயர்களின் ரசனைகளுக்கு ஏற்றவாறு ஒரு பரந்துபட்ட உள்ளடக்கங்கள் தொகுப்பினை வழங்குவதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம். அதை நோக்கிய மேலும் ஒரு படியே ‘இரு துருவம்’ அறிமுகமாகும். இது பிராந்திய உள்ளடக்கங்கள் பிரிவில் எங்கள் நுழைவைக்குறிக்கிறது மற்றும் அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட் மற்றும் SonyLIV உடனான முதல் தமிழ் ஒரிஜினல் கூட்டாண்மையாக இது திகழ்கிறது. SonyLIV உடன் கூட்டாண்மை மேற்கொள்வதில் நாங்கள் மிகுந்த குதூகலமடைகிறோம் மற்றும் இந்த நிகழ்ச்சியின் வழியாக, ஒரு உள்ளூர் உள்ளடக்கங்கள் பயணத்தை துவக்கியுள்ளோம்”**

**<u>SonyLIV குறித்து</u>**

சோனி பிக்சர்ஸ் நெட்வொர்க்ஸ் (SPN) – ன், முதல் ப்ரீமியம் வீடியோ ஆன் டிமான்டு (VOD) சேவையாகத் திகழும் SonyLIV, பயனர்களுக்கு அனைத்து சாதனங்களிலும் ஒரு மல்டி-ஸ்கிரீன் இடையீடுகளை அளிக்கிறது. ஜனவரி 2013 – ல் அறிமுகம் செய்யப்பட்ட இது, 24 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அபரிமிதமான உள்ளடக்கங்கள் தொகுப்பை, சோனி பிக்சர்ஸ் நெட்வொர்க்ஸ் இந்தியாவின் நெட்வொர்க் சேனல்களிலிருந்து வழங்குவதை ஏதுவாக்குகிறது. மேலும் இது, பல்வேறு திரைப்படங்கள் தொகுப்புடன், விளையாட்டுகள், நிகழ்ச்சிகள், இசை, உணவு மற்றும் உடற்பயிற்சி போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்த உள்ளடக்கங்களையும் கொண்டுள்ளது.

இதுநாள் வரை, 109 மில்லியனுக்கும் மேற்பட்ட ஆப்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், போட்டியாளர்கள் மத்தியில், ஒரிஜினல் பிரத்தியேக ப்ரீமியம் உள்ளடக்கங்களை வழங்குவதில் SonyLIV முதலாவதாகத் திகழ்கிறது. தனது பிரிவின் ஒரு உண்மையான முன்னோடியாகத் திகழும் SonyLIV, ஆன்லைன் அடித்தளங்களுக்கான பிரத்தியேகமான ஒரிஜினல் நிகழ்ச்சிகளை இந்திய அளவில் முதல் முறையாக அறிமுகம் செய்தது. மிகப்பெரிய கால்பந்து போட்த்தொடரான 2018 FIFA உலகக் கோப்பை ரஷ்யாவை ஸ்ட்ரீமிங் செய்ததையடுத்து, கால்பந்து ரசிகர்களுக்கான மிகவும் விரும்பப்படும் ஆன்லைன் சேருமிடமாக இது தமிகழ்கிறது. மேலும் SonyLIV, இந்தியா டூர் ஆ.ஃப் சவுத் ஆப்ரிக்கா, இந்தயிா டூர் ஆ.ஃப் இங்கிலாந்து மற்றும் இந்தியா டூர் ஆ.ஃப் ஆஸ்திரேலியா ஆகியவற்றையும் 2018 – ல்

ஸ்ட்ரீம் செய்துள்ளது. UEFA சேம்பியன்ஸ் லீக், UEFA ஐரோப்பா லீக், லா கிகா போன்ற பல்வேறு மிகப்பெரிய கால்பந்து போடம்டித்தொடர்களும் இதில் கிடைக்கப்பெறும்.

டிரிப்ளிங் சீஸன் 1 மற்றும் 2 போன்ற TVF உள்ளடக்கங்களையும் SonyLIV கொண்டுள்ளது. அமெரிக்க பொழுதுபோக்கு ஜாம்பவமான் லயன்ஸ் கேட் பிளேயின் - சிறந்த நிகழ்ச்சிகளையும் இந்த அடித்தளத்தில் கொண்டுள்ளது. SonyLIV பல்வேறு விருதுகள்-வென்ற ஆங்கில உள்ளடக்கங்கள் மற்றும் தி குட் டாக்டர், மிஸ்டர்.மெர்சிடீஸ், டேமேஜஸ், கவுண்டர்பார்ட் மற்றும் தி ஹேண்ட்மெய்ட்ஸ் டேல் போன்ற விருதுகள் வென்ற நிகழ்ச்சிகளும் உட்பட்டுள்ளன.

www.sonyliv.com

**About Sony Pictures Networks India (SPN)**

Sony Pictures Networks India (SPN), is an indirect wholly owned subsidiary of Sony Corporation, Japan.

SPN has several channels including Sony Entertainment Television (SET and SET HD), one of India's leading Hindi general entertainment television channels; MAX, India's premium Hindi movies and special events channel; MAX 2, another Hindi movie channel showcasing great India Cinema; MAX HD, a high definition Hindi movie channel airing premium quality films; WAH, the FTA channel for Hindi movies; SAB and SAB HD the family-oriented Hindi comedy entertainment channels; PAL, a genre leader in rural Hindi speaking markets (HSM) showcasing the best of Hindi general entertainment and Hindi movies from SPN's content library; PIX and PIX HD, the English movie channels; AXN and AXN HD, the channels showcasing the best in Reality, Entertainment and Drama; Sony BBC Earth and Sony BBC Earth HD, the premium factual entertainment channels, Sony AATH, the Bangla entertainment channel; MIX a refreshing Hindi music channel; YAY!, the kids entertainment channel; sports entertainment channels – SONY SIX, SONY SIX HD, SONY ESPN, SONY ESPN HD, SONY TEN 1, SONY TEN 1 HD, SONY TEN 2, SONY TEN 2 HD, SONY TEN 3, SONY TEN 3 HD; Sony **मराठी**, the Marathi general entertainment channel; SonyLIV - the digital entertainment VOD platform; SPN Productions, the networks' film production arm and Studio NEXT the independent production venture for original content and IPs for TV and digital media. SPN reaches out to over 700 million viewers in India and is available in 167 countries.

The network is recognized as an employer of choice within and outside the media industry. SPN is a recipient of several awards, including the 'Aon Best Employers India' Award in recognition of SPN's unique workplace culture and exceptional people practices, consistently ranking amongst India's Top 10 Companies with Best Health & Wellness Practices by SHRM & CGP Partners, listed by Working Mother & AVTAR as one of the 100 Best Companies for Women in India and adjudged one of India's Great Workplaces by the Great Place to Work® Institute. Sony Pictures Networks India Private Limited is in its 24th year of operations in India. It has a subsidiary, MSM-Worldwide Factual Media Private Limited and an affiliate, Bangla Entertainment Private Limited in India.

For more information, log onto **www.sonypicturesnetworks.com**

**Media contacts:**

**Jolenta D'Souza:** +91 9167265512 | Jolenta.dsouza@setindia.com
**Somdatta Sen:** +91 9833596410 I somdatta@avianwe.com
**Sanjay:** +91 9094630086 | sanjay@avianwe.com
**Vamika Naruka:** +91 8652289379 | vamika@avianwe.com